Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 386 / 2025** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | **திரு. கருப்பசாமி** |
| **Father's Name** | : | சண்முகம் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை மேலவாசலில் குடியிருந்து வருகிறேன். தென்னங்குருத்து வியாபாரம் செய்து வருகிறேன். நான், என் மகள் பாண்டிச்செல்வி, என் பேரன் ஹரீஸ், பேத்தி கவீந்திராஸ்ரீ, மருமகனான ஆஜர் எதிரி ஆகியோர் வசித்து வருகிறோம். பாண்டிச்செல்வி எனது கொழுந்தியாள் மகள் ஆவார். எனது கொழுந்தியாளும் அவரது கணவரும் இறந்துவிட்டதால் பாண்டிசெல்வியை நாங்கள் தான் வளர்த்து வந்தோம். என் மனைவி வழக்கு சம்பவத்திற்கு முன்பே இறந்துவிட்டார். ஆஜர் எதிரி எனது வளர்ப்பு மகளான பாண்டிச்செல்வியின் கணவர் மற்றும் எனது மருமகன் ஆவார். கடந்த 25ம் தேதி 2வது மாசம், 2025ம் வருடம் சிவராத்திரி அன்று காலை 07.00 மணிக்கு வேலைக்குப் போய்விட்டு, இரவு சுமார் 11.00 மணிக்கு வீட்டிற்கு திரும்ப

வந்தேன். அப்போது என் மகள் வீட்டில் துணி துவைத்துக் கொண்டிருந்தாள். துணி துவைத்து முடித்தவுடன் என் மகள் என்னிடம் குளிக்கப் போவதாகச் சொன்னாள். நாங்கள் குடியிருக்கும் 3வது மாடியில் இருந்து கீழே இறங்கி வந்தேன். சுமார் 1/2 மணி நேரம் கழித்து மீண்டும் மாடியில் உள்ள என் மகள் வீட்டிற்குப் போனேன். பாண்டிச்செல்வியும், ஆஜர் எதிரியும் love marriage செய்து கொண்டார்கள். அதை நானும் என் மனைவியும் ஏற்றுக் கொண்டோம். வீரச்சின்னம்மாள் எனது பக்கத்து வீட்டுக்காரர். வீரச்சின்னம்மாள் தான் எனது பேரன், பேத்தியைப் பார்த்து வருகிறார். எனது பேரப் பிள்ளைகளின் படிப்பு செலவுகளை வீரச்சின்னம்மாள் தான் கட்டுகிறார். பாண்டிச்செல்வி இறப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, மீனாட்சி மில்லில் செப்பல் ஸ்டான்டில் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரி மீது வேறு வழக்குகளும் உள்ளது. அந்த வழக்குகளில் மத்திய சிறையில் இருந்தார், எதிரியை பெயிலில் எடுக்க வீரசின்னம்மாள் பண உதவி செய்தார். என் மகள் தான் எதிரியை பெயிலில் எடுத்தார். எதிரி மாநகராட்சியில் துப்புறவு பணியாளராக வேலை பார்த்து வந்தார். எதிரி வேலைக்கு சரியாகப் போகமாட்டார். 10 நாட்கள் வேலைக்குப் போவார். அப்புறம் போகமாட்டார். தினமும் குடித்துவிட்டு தான் வருவார். பாண்டிச்செல்வி எதிரியிடம், இப்படி டெய்லி ஊத்திக்கிட்டு வந்தால் வீட்டிற்கு வராத என்று சொல்லி கண்டித்தார். அதன் பிறகு எதிரி பேசாமல் வந்து போய்க் கொண்டு தான் இருந்தார். சம்பவ நாள் அன்று 01.00 மணிக்கு எதிரி வந்தார். நான் தான் கதவு திறந்துவிட்டேன். என் மகளும் பேரனும் ஒரு ரூமில் தூங்கிக் கொண்டு இருந்தார்கள். நான் எனது இடத்தில் படுத்துக் கொண்டேன். அன்றும் எதிரி குடித்துவிட்டு வந்தார். என் பக்கத்தில் தான் படுத்திருந்தார். திரும்ப எந்திரிச்சு அடிக்கடி பாத்ரூம் போனார். பின்னர் பாத்ரூம் சென்றுவிட்டு 1/2 மணி நேரம் கழித்து தான் வந்தார். நானும் படுத்து

தூங்கிவிட்டேன். அதிகாலை சுமார் 04.00 முதல் 04.30 மணி இருக்கும். எங்கள் வீட்டில் உள்ள ஒரே ரூமை பிளைவுட் மூலம் ரூம் தடுத்துள்ளார்கள். என் மகளும் பேரனும் அறைக்குள் படுத்திருந்தார்கள், நானும் எதிரியும் வெளியே படுத்திருந்தோம். பிளேவுட்டின் உள் தாழ்ப்பாளை என் மகள் திறந்துவிட்டிருந்தார். அப்போது என்னை விடுறா, விடுறா என்று பாண்டிச்செல்வியின் அலறல் சத்தம் கேட்டது. நான் உடனே தடபுடல் என்று எழுந்து சென்று, என் மகள் படுத்திருந்த அறையில் சென்று பார்த்த போது, என் மருமகன் என் மகள் மீது கையில் கத்தியுடன் உட்கார்ந்து இருந்தார். கத்தியால் என் மகளைக் குத்தினார். என் மகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தாள். என் பேரன் அம்மா அம்மா என்று கத்தினான். நான் உள்ளே சென்று எதிரியின் கையில் இருந்த கத்தியை பிடுங்கி, விடுறா, விடுறா என்று சொன்னேன். அப்போது எதிரி உன் மகளைப் போய் பார் என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார். என் மகள் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். எனக்கு என்ன செய்வது என்று தெரியாமல் பதட்டத்தில் இருந்தேன். நான் என் மகளை அம்மா அம்மா என்று கூப்பிட்டு பார்த்தேன். லேசாக என் மகள் தலையை அசைத்தார். அவளது கண்கள் மேலே சென்றுவிட்டது. என்னைப் பார்த்துக் கொண்டு இ ருக்கும் போதே என் மகளின் உயிர் பிரிந்துவிட்டது. அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கம் உள்ளவர்கள் வந்து பார்த்தார்கள். என் பேரன் சென்று, வீரசின்னம்மாளைக் கூட்டி வந்தார். அவர் வந்து பார்த்துவிட்டு கத்தினார். அதன் பின் 108க்கு போன் செய்தோம். அவர்கள் வந்து பார்த்துவிட்டு, என் மகளின் கையைப் பிடித்து பார்த்துவிட்டு, என் மகள் இறந்துவிட்டதாகச் சொல்லிவிட்டார்கள். என் மகளின் பிரேதத்தை ஆம்புலன்சில் எடுத்துச் சென்றுவிட்டார்கள். பிரேத பரிசோதனை முடித்து என் மகளின் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். திடீர் நகர் காவல்

நிலையத்திற்கு நானும் என் பேரனும் வீரசின்னம்மாளும் சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அங்கிருந்த போலிசாரிடம் நடந்த விபரங்களைச் சொன்னேன். அவர்கள் நான் சொன்னதை எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். **நான் அளித்த புகார் அதசாஆ.1 ஆகும்.** வீரசின்னம்மாள் அந்த புகாரில் சாட்சி கையொப்பம் போட்டார். எனது சட்டையில் இரத்தமாக இருந்தது. போலிசார் என் வீட்டிற்கு வந்த போது நான் அணிந்திருந்த என் மகளின் இரத்தக் கறை படிந்த சட்டையையும் கத்தியையும் வாங்கிக் கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் போட்டோவில் உள்ள மஞ்சள் நிற சட்டை நான் அன்று போட்டிருந்தது தான்.

**நீதிமன்ற குறிப்பு :** சான்று பொருட்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை